**MCOP .No. 40/2019**

**Date : 08.08.2022**

***ம.சா.2  சங்கரநாரயணன்***

***1ம் எ.த.கு.வி***

_____ நான் சங்கரன்கோவில் நகராட்சியில் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் துப்பரவு பணியாளராக உள்ளேன். இறந்து போன முருகேசன் சம்பவத்தின்பொழுது இருசக்கரவாகனத்தில் சென்றாரா என்றால் சரிதான். முருகேசன் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றார். அவ்வாறு சென்று கொண்டு இருந்த போது ெ தற்கில் திரும்பும்பொழுது தான் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடம் ஆள்நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றால் சரியல்ல. சம்பவ இடம் அருகே வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் அருகே போலிசார் தடுப்பு வேலி அமைத்து வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தில் இருந்து கோமதி அம்பாள் பள்ளி வரை 2 வேகத்தடை, ஒரு போலிசார் தடுப்பு வேலி உள்ளதால் வாகனங்கள் அனைத்தும் மெதுவாகத்தான் செல்ல இயலும் என்றால் சரியல்ல. இறந்து போன முருகேசன் எனக்கு உறவினர் என்றால் சரிதான். நான் சம்பவ விபத்தினை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், இறந்து போன முருகேசன் எனது நெருங்கிய உறவினர் என்பதால் பொயய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்லல. இறந்து போன முருகேசனின் கவனக்குறைவால் தான் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவத்தின்பொழுது *1ம்* எதிர்மனுதாருக்கு ஓட்டுநர் உரிமம் செல்லதக்க நிலையில் இருந்தது என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியலல்

**2ம் எ.தகு.,வி**

விபத்து சமயம் முருகேசன் சென்ற வாகனத்தில் மூன்று நபர்கள் பயணித்தார்கள். முருகேசனுக்கு சிகிரெட, மது ` பிடிக்கும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல விபத்து சமயம் முருகேசன் குடிபோதையில் வாகனம் ஓட்டி சென்றுள்ளார் என்றாலி சரியல்ல. முருகேசனின் கவனக்கறையவால் தான் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்து சமயம் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும,, முருகேசன் என்னுடைய உறவினர் என்பதால் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காகா

சம்பவத்தினை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன். எனறால் சரியல்ல.

-